**O.S.No.18/2017**

பி.வா.சா.3, திரு.அழகர்
நாள் :18.02.2026 நேரம் : 11.35 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் எனது பெற்றோர்களுக்கு கமுதியில் பிறந்தேன். எனது தகப்பனாரின் பூர்வீக வீடு கமுதி முத்துமாரியம்மன் கோவில் வடக்கு தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணம் 1985 ல் நடைபெற்றது. எனது மாமனாரின் பெயர் குருசாமி மற்றும் எனது மாமியார் பெயர் வள்ளி என்றால் சரிதான் . மேற்படியாளர்களின் மகள் செல்லம்மாளை தான் 1985 ம் ஆண்டு திருமணம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் மற்றும் சிடியில் உள்ளது 8 ம் வாதி சடாச்சரம் மற்றும் அவர் மனைவி என்றாலும் அதில் காணப்படும் தாவா சொத்தான சந்தை நோக்கி தான் அவர்கள் வீட்டின் வாசல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ.1**0 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2)நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது 1 ம் பிரதிவாதியின் மாமனார் ஐபூ தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். 9 ம் வாதியான சைவத்துரையின் வீட்டிற்கு தலைவாசல் தென்புறம் உள்ளது என்றால் சரியல்ல. கிழக்குபுறம் தான் உள்ளது. தெற்கு பார்த்து தான் வாசல் உள்ளது என்றாலும் வழக்கிற்காக கிழக்குபுறம் உள்ளது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பூச்சியம்மாளிடம் இருந்து தான் 1 ம் பிரதிவாதி முகம்மது அப்துல்லா ராவுத்தர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் 1942 மற்றும் 1945 ம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் பெற்ற பத்திரங்களில் உள்ள நான்குமால்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாக தான் குறிப்பிட்டிருப்பார்கள்.

3)மேற்படி 2 பத்திரங்களிலும் சிதம்பர பண்டிதன் சந்திற்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி பின் யோசனையின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வீடு கட்டும் போது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் sun shade அமைத்ததாக சொல்லி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டின் sun shade தாவா சொத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் புழங்கியது இல்லை என்றாலும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வெள்ளையன் வகையறாவை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொக்கலிங்கம் பண்டிதருக்கும், வாதிகளுக்கும் வழக்கு நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் தெரிந்திருந்தும் 1ம் பிரதிவாதியின் மாமனார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4)தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கோ, அவரது வகையறாக்கோ எந்த வகையிலும் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் சமுதாயம் மிகவும் குறைவான சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வேறு நபர்கள் வரக்கூடாது என்பதற்காக வாதி வகையறா கல் ஊன்றி உள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தான் கல் ஊன்றியுள்ளார்கள் என்றாலும் 1ம் பிரதிவாதி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள பாதை எனக்கு பாத்தியப்பட்ட பாதை என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தோடு சேர்ந்த பாதை வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.00 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.18 16:24:59 +0530